**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண்.36/2011**

நாள்: 27.03.2026.

பெயர்: சுப்ரமணியன் (வா.சா.1) த/பெ: கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1, 2, 3, 4, 9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1) எனது தாத்தா பெயர் கந்தசாமி முதலியார் என்றால் சரிதான். கந்தசாமியின் தந்தை பெயர் வைத்தியலிங்கம் என்றால் சரிதான். வைத்தியலிங்கத்தின் மகன்கள் 1) அருணாச்சலம், 2) கந்தசாமி, 3) நடராஜன், 4) ரத்தினம், 5) வேலாயுதம் ஆவார்கள். வேலாயுத முதலியாருக்கு முன்பே அவரது நான்கு சகோதரர்களும் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். அருணாச்சலத்திற்கு வீரபத்திரம், ராமசந்திரன் மகன்கள் என்றால் சரிதான். எனது தத்தா கந்தசாமிக்கு கலியபெருமாள் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். நடராஜனுக்கு பாவாடை முதலியார் என்ற 1 மகன் ஆவார். ரத்தினத்திற்கு வஜ்ரவேல் என்ற 1 மகன் ஆவார். வஜ்ரவேலுவின் மகன் 3 பிரதிவாதி, மனைவி 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். வேலாயுதத்திற்கு இறந்து போன 1ம் பிரதிவாதி தியாகராஜன், 2ம் பிரதிவாதி ராஜேந்திரன், 8ம் பிரதிவாதியின் தந்தை தங்கராசு ஆவார்கள்.

2) எனது தந்தை எனக்கு 1 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாய் பெயர் அஞ்சலை என்றால் சரிதான். எனது தந்தைக்கு நானும், எனது அம்மாவும் தான் வாரிசு என்றால் சரிதான். எனது தாய், வேலாயுதம், ராமசந்திரன், பாவடை, வஜ்ரவேல் ஆகியோர்கள் சேர்ந்து எங்கள் குடும்ப சொத்தைப் பொறுத்து 13.02.1980 ஆம் ஆண்டு பாக அட்டவணை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

**(1, 2, 3, 4, 9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/க.சுப்ரமணியன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.